O.S.39-2018

**முதன்மை மாவட்ட நீதிமன்றம், புதுக்கோட்டை**

அ.வ.எண்.39/2018

பிரதிவாதி தரப்பு 1வது சாட்சி மீனாட்சி என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திருமதி. அனுராதா, கிரேடு-1 பெஞ்ச் க்ளார்க் என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி. மீனாட்சி | வயது | : | 24/24 |
| கணவர் பெயர் | : | ரமணா | தாலுகா | : | புதுக்கோட்டை |
| கிராமம் | : | மேட்டுப்பட்டி | தொழில் | : | வீட்டு குடித்தனம் |

நாள்-05.03.2024

பி.வா.சா.1

**<u>முதல் விசாரணை</u>**

நான் பிரதிவாதி தரப்பு 1வது சாட்சியாவேன். நான் முதல் விசாரணை நிரூபண பிரமாணப்பத்திரம் தாக்கல் செய்திருக்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். நான் படித்து பார்த்து கையெழுத்து போட்டேன். அதில் உள்ள விசயங்கள் உண்மையானது.

1. கணினி பட்டா **பி.வா.சா.ஆ.1,**
2. இறப்புச்சான்று நகல் **பி.வா.சா.ஆ.2,**
3. வாரிசுச்சான்று நகல் **பி.வா.சா.ஆ.3,**
4. வாகனப்பதிவுச்சான்று புகைப்பட நகல் **பி.வாச.ஆ.4,**
5. இருசக்கர வாகனத்தின் பதிவுச்சான்று நகல் **பி.வா.சா.ஆ.5,**
6. மின் கட்டண ரசீதுகள் (4 எண்ணிக்கை) **பி.வா.சா.ஆ.6,**
7. எனது தாயாரின் ஆதார் அடையாள அட்டையின் நகல் **பி.வா.சா.ஆ.7,**
8. எனது தாயாரின் வாக்காளர் அடையாள அட்டையின் நகல் **பி.வா.சா.ஆ.8,**
9. எங்களது குடும்ப அட்டையின் நகல் **பி.வா.சா.ஆ.9,**
10. எனது ஆதார் அட்டையின் நகல் **பி.வா.சா.ஆ.10,**

மேற்படி பி.வா.சா.ஆ.1 முதல் 10 ஆவணங்கள் அசல் ஆவணங்களுடன் ஒப்பீடு செய்யப்பட்டு புகைப்பட நகல்கள் குறியீடு செய்யப்பட்டது.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணைக்காக வாய்தா வழங்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.